337

Registered No. M. 2445.

உ
சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலய தேசிகசுவாமிகள்
அருட் கோடையால்
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றுக்
கழகத்தினின்று வரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

17 JUL 1961

மலர் க } விபவ ஆண்டு மாசித் திங்கள். 1929 — பீப்ரவரி. { இதழ் உ

க. ஐந்தாம் ஆண்டு விழாத் தலைவர் முன்னுரை.
உ. வீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும், அவற்றின் தோன்மையும் :—
ங. வீரசைவம் :—
ச உண்மையுணர்வு :—
ரு அட்டாபரணம் :—
சு. தென்னாட்டு வீரசைவர்களின் கடமை :—
எ. தென்னாட்டு நிகழ்ச்சிகள் :—
அ. நமது பத்திரிகையைப்பற்றிய மதிப்புரை :—
கூ. வடநாட்டு நிகழ்ச்சிகள் :—
ய. இஷ்டலிங்க வபிஷேகமாலை யுரை :—

பத்திராசிரியர் { வீ. குமாரவீரய்யர், 'வீரசைவநிலையம்' முசிறி, திருச்சிஜில்லா.

விவேகபானு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

உ

சிவமயம்.

சந்தா நேயர்கட்கோர் வேண்டுகோள்.

மெய்யன்புடைய ஐயன்மீர்!

நமது வீரசைவத்தைப் பெற்றுக்கொண்ட வுண்மையன்பர்களிற் சிலர், பத்திரிகை சம்பந்தமான திருத்தங்களை எடுத்துக்காட்டியும், சந்தாதாரர்களின் கையொப்பம் வாங்கி யனுப்பிவைத்தும், சந்தாத் தொகையை மணியார்டர் செய்தனுப்பியும் காலத்தாற்செய்த நன்றிக்கு யாமியற்றும் வணக்கம் அன்னார்க்குரியதாகுக!

இப்பத்திரிகை, மகாசங்கத்தின் சார்பாக நிறைவேற்றற் கழகத்தாரால் நடத்தப்பெறுவதாலும், ஸ்ரீ பொம்மபுரம் மகாசந்நிதானம் புரவலராக ஆதரித்துவருவதாலும், பத்திராசிரியர் முதலிய தொண்டர்கள் பொருட்பயனைக்கருதாது சமய முன்னேற்றத்திற்காகத் தொண்டாற்றிவருவதாலும், இதன் சம்மந்தமாக மீத்தமாகும் பொருளை வீரசைவ சமூகப் பொதுநலன்கட்குப் பயன்படுத்தக் கருதியிருப்பதாலும் இதன் சந்தாத்தொகையை மிகுதியெனக்கருதாது சந்தாநேயர்களனைவரும், வரும் இரண்டாவது இதழைப்பெற்றுக்கொண்டு சந்தாத்தொகையை மார்ச்சு முதல் தேதிக்குள் மணியார்டர்மூலம் அனுப்பிவைப்பார்களாயின் பெரிதும் உபகாரமாகுமென வேண்டிக்கொள்ளுகின்றேம்.

இதுவரை இப்பத்திரிகையை நிலைபெறச்செய்வதற்குரிய அரசியலார் அனுமதிபெறல், தபால் இலாகாவில் பதிவுபெறுதல், சந்தாநேயர்களைச் சேர்த்தல்முதலிய அடிப்படையான தொழின்முறைகளை மேற்கொண்டமையால் எண்ணியவாறு உயரிய அரிய கருத்துக்களை வெளியிடக் காலம் இடந்தந்திலது. இனி அவையனைத்தும் முற்றுப்பெற்றமையானும், கட்டுரை யெழுதும் ஆசிரியர்கள் முன்வந்துதவ வாக்களித்தமையானும் மூன்றாவது இதழிலிருந்து சந்தாநேயர்கள் படித்தறிந்து மனங்களிக்கும் முறையில் எல்லா நலன்களும் நிறையப்பெறும் என்பதையும் குறிப்பிடுகின்றோம்.

இதன்கண் வரும் விஷயங்கள் தொடர்புடையனவாதலின் முதல் இதழ் வரப்பெறாதவர் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டுமெனவும், இடையில் சந்தாதாரராவோர்க்கும் முதல் மலர் முதல் இதழிலிருந்தே அனுப்பிக்கப்பெறும் என்பதையும் ஞாபகப்படுத்துகின்றோம்.

ப - ர்.

உ

சிவமயம்.

பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள்.

17 JUL 1931

பைந்தா துகுக்கு நறுங்கொன்றைப் பனிமா மலரும் குழவியிளம்
பயில்வெண் மதியுந் துளையெயிற்றுப் பாம்புஞ் சுமக்குமன்று நீ
செந்தா மரைச்சே வடிநோவத் திரும்பித் திரும்பி யோரிரவிற்
சேல்வென் றகன்ற வரிமதர்க்கட் சிலைக்கூன் புருவத் தரளநகை
நந்தா விளக்கின் றிருமனைக்கு நாவனகரின் வன்றொண்டர்
நடத்த வொருதூ தாளாகி நடந்த வுனக்கின் றடியேம்பால்
வந்தால் வருமோர் பழியுண்டோ மதுரக் கனியே வருகவே
மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே.

ஸ்ரீ சிவஞானபாலையசுவாமிகள் திருவடிவாழ்க.

உ
சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகசுவாமிகள்
அருட் கொடையால்,
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றக்
கழகத்தினின்று வரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க	விபவ ஆண்டு மாசித் திங்கள். 1929 — பிப்ரவரி.	இதழ் உ

ஐந்தாவதாண்டிற் றலைமை வகித்த, திருவாளர், G. சிக்கவீரப்பா B. A., L. L. B., அவர்கள் முன்னுரை.

(முன்தொடர்ச்சி)

மிகத் தொன்றுதொட்டதெனக் கருதத்தக்க இவ்வீரசைவ மதமானது, நம்மவரென நம்நாட்டில் நம்முடனிருந்து நன்மைபுரிபவரெனக் காட்டிப்பல சூழ்ச்சி முறையால் தாமே மேனிலைக்கு வந்து செல்வாக்குடன் காணப்படும் நயவஞ்சகர்களுடைய கீழ்நோக்கிய எண்ணத்தாலும், மகம்மதியர் ஜைனர் பௌத்தர் முதலிய புறமதத்தினர் நம்நாட்டிற் பரவிச் செய்துவந்த பலகொடிய செய்கையாலும் ஓர்காலத்தில் நசித்துவிடும்போல் தோன்றியது.

அப்பொழுது விஜயபுரம் ஜில்லா கப்படியென்னும் நகரின்கண் அநேகநாளாகப் பிள்ளைப்பேறில்லாக் குறைவால் நந்தீச்சுரவிரதஞ் செய்து கொண்டிருந்த மாதரசனென்பான் மனைவி மாதாம்பிகையின் கருவில் அவ்விரதநாயகராகிய நந்தியெம்பெருமானர் கருக்கொண்டிருந்து அவதாரஞ் செய்தருளினர். அக்குழந்தை சிலநாள் அழாமலிருந்தது. அவதார மகிமையை யறியாத தந்தையார் பலசிகிச்சை செய்தும் பயன்படாமற் போயிற்று. சுற்றத்தாராகிய ஆராத்தியப் பிராமணரனைவரும் செயலொன்றுமின்றித் திகைத்து நின்றனர். ஆனல் அப்பொழுது அங்கு ஓர் சங்கமமூர்த்தி யெழுந்தருளி விபூதிதரித்து

இலிங்கதாரணமுஞ் செய்வித்து 'பசவா, என்றழைக்க அக்குழந்தை வாய்விட்டழுத குரலோசையைக் கேட்டு யாவரும் மகிழ்ச்சிகொண்டு சங்கம மூர்த்தியின் திருவடியை வணங்கி நிற்க உடனே அவர் மறைந்துவிட எங்குந்தேடிக் காணாமையால் கூடல சங்கமேஸ்வரரே சங்கம மூர்த்தியாக வந்தருளினரென நிச்சயித்து ஆலயத்திற்குச் சென்று ஆராதனை முதலியவைகளைச் செய்து மகிழ்ந்திருந்தனர். குழந்தையோ நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இளம்பிறை போல் வளர்ந்துவந்தது. கல்விப் பயிற்சியில் அளவற்ற வூக்கத்தையும் சாஸ்திர வாராய்ச்சியில் ஆழ்ந்த மதிநுட்பத்தையும் அச்சிறுவயதிலேயே காட்டிவரப் பலருங் கண்டு அன்புடன் பாராட்டிவந்தனர்.

ஓர்நாள் அக்குழந்தை நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருக்க ஒருவன் ஓராட்டை யிழுத்துக்கொண்டு சென்றனன். அதைக் கண்ட குழந்தைப் பருவமுடையாராகிய பசவேசர்; பலிகொடுக்கச் செல்கின்றானெனக் கேட்டறிந்து பின்தொடர்ந்து அவனுடன் ஆலயத்தினருகே சென்றார். வாத்தியங்கள் முழங்கின பூசையும் நடந்தது யாருங் களிப்புற்றனர். ஆனால் யாதுமறியா ஐயறிவுடைய அப்பேதையாடானது தன்னினத்தைக் காணாது அஞ்சிக் கண்ணீரைத் தாரைதாரையாகச் சொரிந்தது. கொலைக் கருவியைக் கையிற்கொண்டு நின்ற வெறியாட்டாளனாகிய முழுமூடனைக் கண்டு பசவேசர் மிகவும் அஞ்சினார். அம்முழுமூடன் தான்செய்யக் கருதிய கொடுந்தொழிலைச் செய்யத் திடுக்கிட்டுக் கண்ணீர்வார வீட்டிற்குச் சென்ற பசுவேசர் அத்தீத்தொழிற்கிரங்கி எண்ணியெண்ணித் துன்புற்றிருந்தனர்.

இதுநிற்க, தந்தையார் உபநயனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவந்தனர். நம்பசவேசரோ தந்தையைநோக்கி உயிர்ப்பலியைக் கண்டிக்காத எம்மதத்தினும் எனக்கு நம்பிக்கையில்லை. எவ்வுயிர்க்குந் தந்தையாகிய கடவுள் உயிர்ப்பலியை மகிழ்வுடன் ஏற்பாரென்று கருணைக்கடலாகிய அக்கடவுள்மேல் வீண்பழி சுமத்தும் கொள்கையுடையார் எவராயினும் அவர் மதமும் நூல்களும் கொள்கையும் பிறவகையில் எவ்வளவுயர்ந்தனவாயினும் கொள்ளத்தக்கனவல்ல. எவ்வுயிரையுந் தம்முயிர்போற் கருதும் மதமும் கொள்கையுமே கொள்ளத்தக்கன. சுவர்க்கமுதலிய பதவியைத் தருவதாயினும் உயிர்ப்பலி செய்யும் கொள்கையை மேற்கொண்ட எதுவும் வெறுக்கத்தக்கனவாம். "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பான்-

எங்ஙனமாளுமநள்" என்பது பொய்யா மொழியன்றோ? ஆயினும் யான் இவ்வுலகில் உதித்தபொழுதே இலிங்கதாரண சமஸ்காரத்துடன் பிறந்தமையால் இப்போலி மதக்கொள்கை எனக்கு வேண்டுவதில்லையே? பிறந்த சில வருடங்கள்வரை பிராமணத்துவத்தையடையாதவரன்றோ உபநயனத்தால் துவிசனாகல் வேண்டும் என்ற பலகாரணங்களைத் தந்தைக்கு எடுத்துரைப்பாராயினர்.

எட்டுவயதுடையரான பசவேசர் கூறுவனவெல்லாம் பொருத்தமானவையெனத் தோன்றியும் அவர் தந்தை புராதனக் கொள்கையை விடுதற்கொருப்படாதவராய் மீட்டும் உபநயனஞ் செய்வித்தற்குப் பல ஏற்பாடுகளைச் செய்துகொண்டுவந்தனர். பசவேர் வெறுப்புற்ற மனத்துடன் கூடலசங்கம க்ஷேத்திரத்திற்குச்சென்று தாய் தந்தையர் பலமுறை யழைத்தும் இணங்காதவராய் அங்குத் தம்பால் வந்தவர்க்கு வீரசைவ தர்மத்தையும் பரோபகார குணத்தையும் போதித்து வந்தனர். அதனால் அவர் புகழ் எங்கும் பரவியது. அவர் விச்சலராஜனிடம் அமைச்சுரிமைபூண்டு விலக்குவனவற்றை விலக்கி விதிப்பனவற்றை விதித்து ஏழைமக்களை நல்வழிப்படுத்திப் பாதுகாத்துவந்தனர். அவர்காலத்தில் முன்னினும் சிறப்புற்ற வீரசைவ மதமானது இந்தியா தேசமெங்கும் பரவியிருந்ததென்பதற்கு ஆங்காங்குக்காணப்பெறும் ஸ்ரீ பசவேசராலயங்களே தக்க சான்றாகும். பம்பாய் இராஜதானியில் பதினொரு இலட்சமும், ஐதராபாத்தில் எட்டு இலட்சமும், மைசூர் பிராந்தியத்தில் ஏழரை இலட்சமும், மதராசில் ஒன்றரை இலட்சமுமாக வீரசைவர்களிருப்பதாக 1921-வருடத்தில் எடுக்கப்பட்ட குடிக்கணக்கு கூறுகின்றது. தமிழ் தெலுங்கு சில்லாக்களில் வீரசைவர்களில் மாகேசர் மரபைச்சார்ந்த சிலர் ஐயர் ஆராத்தியர் தேவர் என்றும், பக்தரைச்சார்ந்தோர்சிலர் பண்டாரம் பத்தர் என்றும் பலபட்டப்பெயர்களை வைத்துக்கொண்டிருப்பதனால் வீரசைவர்கள் என்ற முழுத்தலைப்பில் கணக்கிடப்பட்டிருக்கமாட்டார் என்பது திண்ணம். மலையாளம் திருவனந்தபுரம் சிலோன் முதலிய பாகங்களிலும் வீரசைவர்களிருக்கின்றார்கள். இமயமலைச் சாரலிலும் வீரசைவர்கள் குடியேறியுள்ளார்கள். இவ்வாறு இமயத்திலிருந்து சிலோன்வரையிலும் பரவியுள்ள வீரசைவர்களின் சங்கியை 40 இலட்சம் என்று கருதப்படுகிறது. இவர்களில் எவ்வகைத் தொழிலாளர்களுமுளர். பெரும்பான்மை வியாபாரமும் வியவசாயமுமே காணப்படுகின்றன.

ஐயன்மார்களிற் பெரும்பான்மையோர் உபாத்தியாயராகவே தமிழ்நாடு களிற் காணப்படுகின்றனர். ஆனால் மது மாமிசம் தோல் முதலிய இழிதொழிலில் வீரசைவர்களிருப்பதாக எங்குங் காணப்படவில்லை. இம்மட்டோ! வடமொழி தென்மொழி முதலிய மொழிகளில் புத்தகம் எழுதியும் செய்யுளியற்றியும் காவியங்கள் செய்தும் புகழ்பெற்ற பெரியோர் பலருளர். வீரசைவர்களில் அரசர்களும் பலரிருக்கின்றார்கள். (தொடரும்.)

வீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும்
அவற்றின் தோன்மையும்.

(முன்தொடர்ச்சி)

இந்த அரம்பாபுரி சமஸ்தானம் கடந்த சிலவருடங்களில் பீடாதிபதிகளில்லாமலிருந்தது. சுமார் மூன்று வருடங்கட்குமுன்னர் இச்சிங்காதனத்திற்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் ஏற்பாடு நடந்துவந்தது. இத்தேர்தலில் பற்பல விடங்களிலிருந்து கல்வியறிவிற் சிறந்த பெரியார் பலர் விருப்பமுடையராக நின்றனர். இவர்களில் தக்காரொருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக மைசூர் கவர்மெண்டாரால் ஒரு சபைஏற்படுத்தப்பெற்றது. இச்சபையினரால் தேர்ந்தெடுக்கப்பெற்று 108-வது பட்டம் மகாசுவாமிகளாக **சகத்குரு வீரசிம்மாசனதீஸ்வர சிவானந்த ராஜேந்திர சிவாசாரியமகாசுவாமிகள்** மூன்று வருடங்கட்குமுன்னர் பீடாதிபதிகளா யமர்ந்தருளினார்கள். இந்த மகாசுவாமிகள் இளமைப் (சுமார் 35 வருடம்) பருவமுடையராயினும் தக்க வேதாகம சாஸ்திர பண்டிதராகவிளங்குகின்றார்கள். இவர்கள் கல்கத்தா கவர்மெண்டு சமஸ்கிருத கல்லூரியில் வியாகரணதீர்த்த பரீக்ஷையில் முதற்றரமாகத் தேர்ந்திருப்பதுடன் கன்னடம் சமஸ்கிருதம் தெலுங்கு இந்தி மராடி முதலிய பாஷைகளில் பயிற்சியுடையவராகவு மிருக்கின்றார்கள். இவர்கள் கருணை முதலிய குணங்களால் மேன்மையுற்றவராகவிளங்குதலுடன் மதோத்தாரணஞ் செய்வதிலும் மிகுந்த விருப்பமுடையராகவு மிருக்கின்றார்கள். மைசூரில் பெரியதொரு சமஸ்கிருத கல்லூரி யொன்று தாபிக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டிருக்கின்றார்கள். இந்த மகாத்மாவால் வீரசைவ சமாசத்திற்குப் பலஅறநிலைகள் ஏற்படக்கூடுமென அறிஞர்கருதுகின்றனர்.

2 வது ஸ்ரீமத் உஜ்ஜயினி சமஸ்தானம்.

இந்த சமஸ்தானத்தின் பழமையானபீடம் பல்லாரி ஜில்லா கோட்டூர் தாலூகாவிலிருக்கின்றது. இந்தப்பீடம்மிகப்புராதனமானது. இம்மடாலயம் கி. பி. இரண்டாவது நூற்றாண்டிலிருந்து பாண்டிய வரசர்களால் பாராட்டப்பெற்றுள்ளது. இது பலவற்புதச் செயல்களால் கட்டப்பெற்றிருக்கின்றது என்பதற்கு ஓர் சிலாசாசனம் மிகப் பழமையான பாண்டிய மன்னரால் எழுதப்பெற்றதாகக் கிடைத்திருக்கின்றது. இத்தகைய சிலைபெழுத்துக்களும் தாமிர சாசனங்களும் பீடத்தின் அழகிய கட்டடங்களும் தக்க சான்றுகளாகின்றன.

இப்பொழுது இப்பீடத்தின் தலைவராக விளங்கும் 108-வது பட்டம் **ஸ்ரீ சகத்குரு சத்தர்ம சிம்மாசனாதீஸ்வர சித்தலிங்க தேவாசாரிய மகாசுவாமிகள்** சித்திரகல் துர்க்கம் ஜில்லா பங்காரு நாயக்கன்பள்ளியிற்பிறந்து அந்நகரைத் தூய்மையாக்கினார்கள். இவர்கள் பட்டத்திற்குவந்து சுமார் 24 வருடங்களாகின்றன என்ப. இவர்கள் மேலான தவநிலையுடையவர்கள். இவர்கள் பீடாதிபதிகளாக வந்தபின்னர் உச்சயினிபீடம் உலகத்தில் புகழுடன் தலைசிறந்து விளங்குகின்றது. இவர்கள் பஞ்சபீடங்களின் உயர்ந்தநிலைமையைத் தாபித்தற்காகவும் பலமுயற்சிகளைச் செய்து சிரமத்தையும் வகித்து வந்திருக்கின்றார்கள். இவர்களுடைய ஆசிர்வாத பலத்தால் மூலதனஞ் சேகரிக்கப்பெற்று சென்னை மாகாண வீரசைவ வித்தியா வர்த்தக சங்கமென்று பல்லாரியில் தாபிக்கப்பெற்றிருக்கின்றது. வீரசைவ சமஸ்கிருத வித்தியார்த்திகளுக்காக 50000 ரூபாய்கள் நிதியாகச் சேர்த்து ஸ்ரீ சகத்குரு தாருகாசாரிய பாடசாலையெனக் கோட்டூரில் தாபித்திருக்கின்றார்கள். மைசூரில் தாபிக்கவேண்டுமென்றிருக்கிற வீரசைவ சமஸ்கிருதகல்லூரிக்காக ரம்பாபுரி பீடத்தின் அதிகார சமயத்தில் பதினோராயிரம் ரூபாய்களைக் கொடுப்பதாக வாக்தானஞ் செய்து அதன் வருமானத்தை அங்கேயே சேர்ப்பித்திருக்கின்றார்களென்றுங் கூறுவர். இந்த மகாத்மாவால் இன்னும் பல வீரசைவ மதோத்தாரண அறச்செயல்கள் நிலைபெறவேண்டுமென நுண்ணறிவுடையார் எதிர்பார்க்கின்றனர்.

" தத்வங் மருலசித்தஸ்ய வடக்ஷேத்ரே மகத்தரே
சித்தேச லிங்காஜ்ஜனனம் ஸ்தானமுஜ் ஜயினீபுரே "

என்பது ஸ்வாயம்பு வாகமம். (தொடரும்)

[6]

'வீரசைவம்.'

திருவாளர், ஏகாம்பர ஐயர் அவர்கள்,

தமிழ்ப்பண்டிதர்,

பச்சையப்பர் உயர்தர கலாசாலை, காஞ்சீபுரம்.

இக்கட்டுரையால் அறியக்கிடப்பன யாவையெனில், அடைதற்கரிய மனிதப் பிறவியை அடைந்த நாம் அறியவேண்டுவன, சமயங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்து விளங்குவது சைவசமயம் ஒன்றேயென்பதூஉம், வீராகமம் வாதுளாகமம் ஸ்வாயம்புவாகமம் சுப்ரபோதாகமம் முதலிய ஆகமங்களும், இரேணுக பாஷியம் சோமநாத பாஷியம் பண்டித பாஷியம் ஸ்ரீகர பாஷியம் முதலிய பாஷியங்களும், வேதம் இதிகாசம் புராணம் முதலிய பலசாத்திரங்களும், வீரசைவம் உயர்வுடைத்தெனக் கூறுதலின் அதனையறிந்து கடைப்பிடித்தொழுகல் அதனினுஞ்சிறந்ததென்பதூஉம், வீரசைவம் என்னும் சப்தத்துவயத்தின் சம்யோகத்தால் அதனுண்மைத் தத்துவமுணர்தல் அதனினுஞ் சிறந்த வேறொன்றென்பதூஉம், வீரசைவ சமயாசாரியர்களாகிய இரேவணாராத்தியர் மருளாராத்தியர் பண்டிதாராத்தியர் ஏகோராமாராத்தியர் விஸ்வாராத்தியர் முதலான பூர்வாசாரியர்களுடைய உற்பவ முதலிய மேன்மைகளையும், சர்வேசனாகிய அல்லமாப்பிரபுதேவர் நந்திதேவராகிய பசவேசர் முதலிய ஆசாரியர்களுடைய உண்மை நிலைமைகளையும் ஆராய்ந்துணர்ந்து அன்பு கைவரப்பெறல் யாதினும் சிறந்த பிறிதொன்றென்பதூஉம், வீரசைவத்திற்குரிய அஷ்டாபரணங்களாகிய விபூதி உருத்திராக்கம் பஞ்சாக்கரம் குருலிங்கம் சங்கமம் தீர்த்தம் பிரசாதம் என்பனவற்றின் இலக்கணங்களைப் பிரமாணங்களோடு நன்கறிந்து அடைதல் எல்லாவற்றினுஞ் சிறந்த முடிந்த முடிவாகுமென்பதூஉம் ஆகிய இவைகளேயாம்.

> "மஹான் ப்ரபுர்வை புருஷஸ் ஸத்வங் யைஷப்ரவர்த்தக:
> ஸுநிர்மலா மிமாம்ப்ராப்தி மீஸானோஜ்யோதிரவ்யய:"

என்னும் கிருஷ்ணயஜுர்வேதம், சுவேதாஸ்வதர உபநிஷத் 3-வது அத்தியாயம் 12-வது மந்திரம், 'எல்லாவற்றிற்கும் பெரியவராயும் தலைவராயுமுள்ள புருஷ சப்த்த வாச்சியராகிய பரமசிவமே, இச்சராசரப் பிரபஞ்சங்கட்குக் காரணமாவர். யாவற்றையும் இரக்ஷிப்பவரும் பிரகாசிக்கச் செய்விப்பவரும் அழிவற்றவருமாயுள்ளவர் அவரே

யாம். அத்தகைய பரமானந்த சொரூபியான பரமசிவனுடைய சாக்ஷாத்காரமே ஜன்மாதி தோஷமற்ற மோக்ஷலாபம் என்பர்’ எனக்கூறுநின்றது. ஆதலால், அத்தகைய உத்தமரால் ஆக்கப்பட்ட உலகிற் காணப்படும் உயிர்கள், தாவரம் சங்கமம் என இரு பிரிவினையுடையனவாகக் காணக்கிடக்கின்றன. அவ்விரண்டனுள் புல் பூண்டு செடி கொடி மரம் முதலியன தாவரமாம். புழு புள் விலங்கு மனிதர் தேவர் முதலியோர் சங்கமமாம். இதனை “ புல்லாகிப்........... இத்தாவர சங்கமத்துள் ” என்னுந் தமிழ் வேதத்தாலும், பிரபுலிங்க லீலை 10, 11, 12-வது செய்யுட்களானும் அறியலாம்.

இவ்விரண்டனுள் சங்கமம் உயர்ந்ததாகும், அதனினும் எண்ணரிய பிறவிதனில் மானுடப்பிறவி யாதினும் அரியதாமன்றோ! அதனினும் பாவவழிகளையொழித்துப் புண்ணியவழிகளில் நடக்கும் பரம்பரைகளிற் பிறத்தல் அரியதாமன்றே! இத்தகைய கிடைத்தற்கரிய பெரும்பேறுகள் யாவும் கிடைக்கப்பெற்ற மக்களாகிய நாமெல்லோரும், நல்லதன் நலனும், தீயதன் தீதும் நன்குணர்ந்துஉலகவாழ்க்கையை நடத்தல் மிகவும் அரியதாகும். அவ்வாறு நடத்துங்கால் இன்பந் தருவன இவையென்றும், துன்பந்தருவன இவையென்றும் ஓர்ந்து இன்பந்தருவனவற்றையே விரும்பித் துன்பந்தருவனவற்றை வெறுக்கின்றோமன்றோ? இவ்வாறு தாம்விழைந்த இன்பங்களைத் தம் ஐந்து புலன்களானும் ஆரத்துய்க்கின்றகாலத்து, முன் இன்பந்தந்தன பின் துன்பந் தருவனவாகவும், முன் துன்பந்தந்தன பின் இன்பந்தருவனவாகவும் அநுபவித்தறிகின்றோம்.

இதனைக், கல்வியினிடத்தும் சிற்றின்பத்திடத்தும் வைத்து “ தொடங்குங்காற் றுன்பமா யின்பம்பயக்கும் மடங்கொன் றறிவகற்றுங் கல்வி — நெடுங்காமம், முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய், பிற்பயக்கும் பீழைபெரிது ” எனப் பெரியார் கூறிய உயர்மொழி அறிவுறுத்தாநிற்கும்.

அவ்வாறு அநுபவித் தறிந்த நாம் அடைந்த இன்பங்கள் யாவும் நிலையிய இன்பமா? நிலையற்ற இன்பமா? என்று நுனித்து நோக்கும்போது யாவும் சிறிது இன்பந்தந்து அழிவுற்றனவாகவே காண்கின்றோம்; ஆதலால் இவ்வின்பங்கள் சிற்றின்பங்களாகின்றன. அநுபவித்தறிந்த இவைகள் சிற்றின்பங்களாயின், பேரின்பமென்பதொன்றுண்டெனவுணர்தல்வேண்டும். அப்பொழுது அஃது எத்

தகைத்தென நோக்கும் உணர்ச்சி நிகழ்கின்றது. நிகழ்வுழி சாத்திர வுணர்ச்சி தலைப்படுகின்றது. அப்பொழுது சமயவுணர்ச்சி முதலிய வைகளைப் பெறுகின்றோம். பெற்றநாம் சுருதி யுக்தி அநுபவங்க ளால் புறச்சமயங்களைப்போக்கி ஆகமநெறிச்சமயங்களை அறிதல் நேரி தாமன்றோ? ஆதலின், அறுவகைச் சமயத்து அறுவகையோர்க்கும் வீடுபேறாய்நிற்கும் விண்ணோர் பகுதியாகிய சிவபரம் பொருளை வழி படும் சைவசமயமே, ஒப்புயர்வற்று விளங்குவதென வேதாகமாதிக ளால் விதந்து கூறப்படுதலின் ஒருதலையானோர்ந்து கடைப்பிடித்து ஒழுகாநிற்கின்றோம்.

இக்கருத்தானன்றோ, ஆன்ற அநுபவமுதிர்ச்சிபெற்ற தக் கார் பலரும் "சைவத்தின்மேற் சமயம் வேறிலை யதிற் சாரசிவமாம், தெய்வத்தின் மேற்றெய்வமில்" எனவும், "சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக், கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டு மிந்தக் கருத்தைவிட்டுப், பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண் டா முத்திதரும், தெய்வச்சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே" எனவும் அறைகூவி ஆணைதருவராயினர். சுபம்.

சைவத்தின் ஏற்றத்தினைப் பலசித்தாந்த நூல்கள் விளக்கிக் காட்டுகின்றனவாதலின் அதனை விரித்தல் மிகையாமெனக் கருதி விடுத்தனம்.

(தொடரும்)

'உண்மையுணர்வு'

திருமிகு, லா. சா. வைத்திலிங்க ஐயர் அவர்கள்,

ஆரம்பப் பாடசாலைக் கணக்காயர், பெருவளநல்லூர்.

உலகம், ஆன்மா, கடவுள் இம்மூன்றும் மக்களால் ஆராய்தற் குரியன. உலகம் மக்களால் காணப்படுகின்றது. மக்கள் உலகத் தைக் காண்கின்றார்கள். மக்களது காட்சிக்குப் புலனாய்நிற்கும் உல கம் சத்தாகவும் சடமாகவும் காணப்படுகின்றது. சத்தாவது அறிவு டைப்பொருள் அழிவற்றது; இயங்குந் தன்மையது. சடமாவது அறிவில் பொருள்; இயக்க வியங்குந் தன்மையது.

ஆன்மாவோ எண்ணிறந்தன. பிறப்பும் இறப்பும் இல்லாதன. கடவுளைப்போல் அறிவற்றவை. கண்ணிற்குப் புலனாகாதவை. கடவுளால் அறிவிக்க அறியுந்தன்மையன. போக்குவர வுடையன. அநாதியே பற்றிய அறியாமை காரணமாகத் தம்மியல்புணராது சார்ந்ததன் வண்ணமாந் தன்மையனவாய் இறைவனருளால் நன்னெறி யெய்துதற் குரியனவாய்த் தம்வயமின்றி யிருப்பனவாம்.

கடவுளென்பவரோ, ரூபாரூபமற்றவர். குணாதீதமானவர். நிறமற்றவர். போக்குவரத்தில்லாதவர். உடலுக்குள் உயிராகிய ஆன்மா விருப்பதுபோல் உயிர்க்குள் உயிராயிருப்பவர். பிரிக்கப்படாதவர். பேரின்பமயமாயிருப்பவர். பெரியவற்றிற்கெல்லாம் மிகப் பெரியவர். சிறியவற்றிற்கெல்லாம் மிகச் சிறியவர். பேரறிவும் பேராற்றலுமுடையவர். எல்லாவற்றையுந் தாமாகவேயறிபவர். தம்மைத் தாமேயறிவித்தாலன்றிப் பிறராலறியப்படாதவர். தமக்கென யாதொன்றும் வேண்டாதவர். உயிர்கள்பால் வைத்த பேரருளால் உயிர்களோடும் உலகத்தோடுங் கலந்து வேறுபாடறியாவண்ண நின்று அவற்றையியக்கி ஐந்தொழிலையுந் தமது பேரருட் சத்தியினால் செய்தருளுகின்றவர். இப்படிப்பட்ட இலக்கணமமைந்துள்ள அம்மையப்பரே கடவுளெனப் படுவர்.

சிற்றறிவுடைய ஆன்மாக்கள் பேரறிவாளராகிய கடவுளைக் காண அக்கடவுளுடைய திருவருளே துணைபுரிதல்வேண்டும். இதுபற்றியே ' அவனருளாலே அவன்றாள் வணங்கி ' என்றார் நமது பெரியாரும்.

உயிராகிய ஆன்மாக்கள் உலகத்தைக் காண ஊனக்கண்வேண்டும். உயிராகிய தம்மைக் காணப் போதமாகிய ஞானக்கண்வேண்டும். கடவுளாகிய தலைவனைக் காணவோ அக்கடவுளுடைய திருவருளே வேண்டும்.

ஆன்ம வருக்கத்துள் இன்பநிலையைவிரும்பாதார் யாருமில்லை. அவ்வின்பமோ அவரவர் முயற்சிக்குத் தக்கபடி யுண்டாம். அதுவும் சிற்றின்பம் பேரின்பமென இரண்டாம். சடவுலகத்தில் மனைவி மக்களுடன் சேர்ந் தனுபவிப்பதே சிற்றின்பம். கடவுள்பாற் கலந்து நின்றனுபவிப்பதே பேரின்பம். சிற்றின்பமோ மாயையாற் றோன்றும். பேரின்பமோ திருவருளாலுண்டாம். இனித் திருவருள்தான் எங்ங

னங் கைகூடுமெனில் அறங்கள் பல செய்யப் பாவந்தேயும். அதுதேய நித்த அநித்தங்களின் வேறுபாட்டுணர்வு தோன்றும். அஃது தோன்றவே இருவினை யொப்பும், அதனுல் மலபரிபாகமும் உண்டாம். அஃதுண்டாகவே சத்திநிபாதமாகிய திருவருள் கைகூடும்.

இத்திருவருள் உடனின்றுதவுமாயின் நூலுணர்ச்சியும் உலகியலறிவும் உண்டாம். நூலுணர்ச்சியால் மனத்தெளிவும் கடவுள்பால் அன்பும்உண்டாம். உலகியலறிவால் பிறப்புவகையால் தம்மோடொத்த மக்களனைவரும் அறிவாலும் ஆற்றலாலும தம்மோடொத்தவராய்த் தோன்றி உயர்நிலைக்கு வரும்படி முயற்சிப்பதாகிய உபகாரச் செயல்கள் உண்டாம்.

உபகாரச் செயல்களில் ஒருவர் மனம் ஈடுபடுவதோ அருமை! அங்ஙனம் ஏகதேசத்தில் ஒருசிலர் ஈடுபடுவாராயினும் மக்கள்முக்குண வசத்தராதலின் கைக்கொள்ளும் முறையோ ஒருகால் நன்மையாயும், மற்ெறாருகால் தீமையாயும் முடியவுங்கூடும். ஒருவர் நல்லமனதுடன் ஒன்றைச் செய்யலாம். ஆனுல் அச்செயல் உலகிற்கே கேடுவிளைவிப்பதாய் முடிந்தாலும் முடியலாம். எத்தனையோ நன்மனமுடையார் மேற்கொண்ட அறச்செயல்களும் 'பிள்ளையாராய்ப் பிடிக்கக் குறங்காய் முடிந்த' தென்னும், பழமொழிக்கேற்பப் பெருங்கேட்டை விளைவிப்பதாய் முடிந்ததை நாம் கண்கூடாகக் காண்கின்ேறாமல்லவா? ஆதலால் ஒருவர் கொள்கை முற்றிலும் நன்மையாகவே யிருக்கும் என்று மேற்கொள்வதும், மற்ெறாருவர் கொள்கை முற்றிலுந் தீங்காயே யிருக்குமென்று தள்ளுவதும் எங்ஙனம் பொருத்தமாகும்? இதனுற் றான் தீர்க்கதரிசிகளாகிய அறிவுடையார், 'ஒருவரை வாழ்நாளளவும் ஒரே நிலையிலிருப்பரென்று கொள்ளாது ஆறுமாதத்திற் கொருமுறை ஆராய்ந்தறிதல் வேண்டும்; நற்குணமுடையார் தீக்குணமுடையாராதலும் தீக்குணமுடையார் நற்குணமுடையாராதலும்கூடும்' என்று ஞாபகப் படுத்துகின்றனரன்ேறு?

ஒருவர் உலகினரை ஒப்பாகக் காண்கின்ேற மென்று சொற்பொழிவுஞ்செய்யலாம்; அவரதுமனேநிலையோவேறுபட்டிருக்கலாம். ஒருவர் சொல்லால் வேறுபட்டவராகவுங்காணலாம்; அவரது மனேநிலையும் குறிக்கோளும் யாருக்கும் ஒத்தனவாகவுமிருக்கலாம். ஆதலால் சொற்பொழிவாளரும் பத்திரிகாசிரியர்களும் பல்கியிருக்கின்ற இக்காலத்தே மக்களது மனேநிலை அவ்விருவரது வயப்பட்டுத் தம்வ

யமிழந்து ஓருசிறு அவசியகருமஞ் செய்யுமளவாயினும் அல்லது முற்றத்திலிருந்து புறக்கடை செல்லுமளவாயினும் ஒருநிலைப்படாது அலைந்துகொண்டிருத்தலைப் பார்க்கின்றோமல்லவா? இவ்வாறு இடர்ப்பட்டகாலத்தே உண்மை யுணர்வு மக்களுக்குத் தோன்றுதல் வேண்டாவோ? அதுதான் எங்ஙனந் தோன்றுமெனில் இறைவன் றிருவருள் முன்னின்றுணர்த்தத் தோன்றுதல்வேண்டும். உணர்வு எனினும் ஞானம் எனினுமொன்றே. ஞானமுங் கொள்வகையால் பாச ஞானமெனவும் பசுஞான மெனவும் பதிஞானமெனவும் முத்திறப்படலாம். அவற்றுள் பாசஞானமுடையவனே இருளில் பொருளைக்காண்பவனேயொக்கும். பசுஞானமுடையவனே வென்னில் தீபத்தின்முன் பொருளைக்காண்பவனேயொக்கும். பதிஞானங் கைவரப்பெற்றவனே வென்னில் சூரியனுக்குமுன்னே ஒருங்கே யெல்லாப் பொருளையுங் காண்பவனேயொக்கும்.

ஆகலால் மெய்யுணர்வை விரும்பும் அன்பர்களே! இங்ஙனம் உண்மையுணர்வாகிய ஞானம் முறையாகக் கிடைக்கப்பெற்ற திருவாளர், இம்மையில் கலங்காத நிலையிலிருந்து உலகிய லின்பத்தையும் மறுமையில் நிலைபேறான பேரின்பத்தையும் அடைவாரென்பது திண்ணமன்றோ! இத்தகைய உண்மை யுணர்வு உலகமெங்கும் பரவ உமையொருபாகராம் உரைமனங்கடந்து நிற்கும் கடவுள் திருவருள் பாலிப்பாராக. சுபம்.

அட்டாபரணம்.

திருவாளர், கந்தசாமி ஐயரவர்கள், தேத்தாக்குடி.

சங்கரபத்தியீர்! உங்கள் சரணங்களே எனக் கரணாகுக. அட்டாபரணம் என்னும் இத்தொடர்மொழி அட்ட+ஆபரணம்எனப் பிரிக்கப்படும். வீரசைவர்கள் அணிதற்குரிய எண்வகை ஆபரணங்கள் என்பது இதன் பொருளாகும். அவையாவன, விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்கரம், குரு, இலிங்கம், சங்கமம், தீர்த்தம், பிரசாதம் என்பனவாம். கற்புடை மங்கையர்க்கு மாங்கலியம் சிறந்த வணியாதல்போல வீரசைவராகிய வைராக்கிய சீலருக்கு இவ்வெண்வகைப் பொருள்களும் இன்றியமையாத ஆபரணங்களாம். இவ்வெண் வகை யணிகளை யணியாதவர் வீரசைவருமாகார்; அவரியற்றும்

பூசையும் பூசையாகா. ஆதலின் இந்த அணிகளுள் முதற்கண்ணதாகிய விபூதியின் வரலாற்றினையும் அதன் பெருமையினையும் விளக்கிப் பின்னர் மற்றவற்றையும் முறையே விளக்கி எழுதத்துணிந்தேன். இக்கட்டுரையால் யான் விளக்கவந்தது சிதம்பரத்தின் பிள்ளைக்குத் திருவாசகஞ் செப்பவந்ததொக்கும். ஆதலின் இதன்கண் நேருங்குற்றங்களை யெடுத்துக்காட்டிக் குணம்பல பெருகும்படிச் செய்வீர்களாக.

சதாசாரத்திலும் சத்கிரியையிலும் சிரேஷ்டனான வீரசைவனுக்குத் தூல சூக்கும காரண சரீரங்களில் ஞானரூபமான இலிங்கதாரணம் அவசியமாயிருத்தல்போல சிவபெருமானுடைய பேரருளைக் கொடுக்கும் விபூதிதாரணமும் வேதாகம விதிப்படி அவசியமானதே. ஏனெனில் இவ் விபூதிதாரணமும் கன்ம பந்தத்தைச் சேரவொட்டாது பவத்தை யொழித்துத் தூய்மை செய்யாநிற்கும். வேதாகமங்களும் புராணேதிகாசங்களும் ஸ்மிருதிகளும் தமிழ்மறைகளும் விபூதிதாரணத்தின் பெருமையையும் தரிக்கும் விதியையும் விளங்கக் கூறுகின்றன.

இந்திரன் முதலிய தேவர்களும் பிரமன் முதலிய திரிமூர்த்திகளும் வசிட்டர் முதலான முனிவர்களும் விபூதியால் திரிபுண்டரமணிந்து விளக்கமொடு தோன்றுகின்றனர் எனச் சித்தாந்தசிகாமணி யென்னும் அரிய நூல் கூறுகின்றதன்றோ!

" இந்திரனே முதலாய விமையவரு மலர்த்தவிசி லிருப்போன்றானு
முந்திமலர் தனிலுலகம் பூத்தலையா ழியினரவி னுறங்குவானு
முந்துபுக ழுருத்திரனும் வதிட்டனே முதலாய முனிவர் தாமுஞ்
சுந்தரமா கியதிரிபுண் டரமணிந்து விளக்கமொடு தோன்றுவாரே "

என்பது சித்தாந்த சிகாமணி. வேதங்களை நன்குணர்ந்த வதிட்டர் முதலிய முனிவர்களும் விபூதியின் மேன்மையை நன்குணர்ந்து விதிமுறை தவறாது அணிந்துவருவதால் எல்லாச்சைவர்களும் ஏனையோர்களும் விபூதி யணியவேண்டியது அவசியமெனத் தோன்றுகின்றது.

விபூதிக்கு ஐந்துபேர்கள் உள்ளன. அவை யாவையெனின், 1 விபூதி, 2 பசிதம், 3 பசுமம், 4 சாரம், 5 இரக்ஷை என்பனவாம். விபூதியெனினும் பூதியெனினும் ஒன்றே. ஐஸ்வரியம் என்பது இவற்றின்பொருள்.

கருதிய பெருஞ் செல்வத்தை யளித்தற்குக் காரணமாயிருத்தலின் விபூதியென்றும், பரசிவப்பொருளைவிளக்குதலால் பசிதமென்றும், பாவங்களனைத்தையும் நீக்குதலால் பசுமம் என்றும், துன்பங்களை யணுகவொட்டா தகற்றுதலால் சாரம் என்றும், தீமைகளனைத்தையு நீக்கி எல்லோரையுங் காப்பாற்றுதலால் இரக்ஷையென்றும் பெயர் பெற்றன. காரணப்பெயர்கொண்ட இவ்வைந்துவகை விபூதியும் நந்தை பத்திரை சுரபி சுசீலை சுமனை என்னும் ஐவகைப் பசுவின் கோமயத் (சாணம்) தால் ஆவதாம். இவ்வைவகைப் பசுக்களும் முறையே சிவபெருமானுடைய சத்தியோசாதம் வாமதேவம் அகோரம் தற்புருடம் ஈசானம் என்னும் திருமுகங் களைந்தினின்றுந்தோன்றினவாம். இவ்வைந்து பசுக்களில் நந்தை கருமைகலந்த பொன்னிறமுடையது. பத்திரை கருமைநிறமுடையது. சுரபி வெண்ணிறமுடையது. சுசீலை புகைநிறமுடையது. சுமனை செந்நிறமுடையது. மேற்கூறிய நந்தை முதலிய பசுக்கள் பரமசிவத்தின் ஐந்து முகங்களையடைதலால் விபூதி சத்தியோசாதத்திலும், பசிதம் வாமத்திலும், பசுமம் அகோரத்திலும், சாரம் தற்புருடத்திலும், இரக்ஷை ஈசானமுகத்திலும் பிறக்கின்றனவாம். சைவர் வீரசைவர் என்ற இருவரும் மேற்கூறிய ஐவகை விபூதியையும் காலத்திற்கேற்ப அணிதல்வேண்டும் :— நாடோறுஞ் செய்யும் நித்திய பூசைமுதலானவைகளில் விபூதியையும், வபனாதி (பயிர்களைவித்தலாதி) களில் நேரும் ஆசௌசத்தை நீக்கப் பசிதத்தையும், பிராயச்சித்தங்களில் பசுமத்தையும், முத்தியை விரும்புங்கால் இரக்ஷையையும், மற்றெவ்வினைகளிலும் சாரத்தையும் தரித்தல்வேண்டும். ஐவகை விபூதிகட்கும் ஐவகைப் பசுக்களின் நிறங்களே நிறமாமெனக்கொள்க.

இவ்வைந்துவித விபூதிகளையும் ஆக்குமுறைகள் கற்பம் அநுகற்பம் உபகற்பம் அகற்பம் என நான்குவகைப்படும்.

இவற்றுள் கற்பமாவது :— முறைவழாமல் புதிய கோமயத்தைச் சத்தியோசாதமந்திரத்தைச்சபித்துக்கொண்டே யெடுத்து வாமதேவ மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டே கோசலத்தின் கலப்பால் உருண்டைசெய்துலர்த்தி தற்புருடம் அகோர மந்திரங்களை யுரைத்துக்கொண்டே தீயிலிட்டுத் திருநீறாக்கி ஈசான மந்திரத்தைக் கூறிக்கொண்டே யெடுத்து வைத்துக்கொள்ளல்வேண்டும்; இதுவே கற்பம் என்பது.

அநுகற்பமாவது :— காட்டில் இயற்கையாக வுலர்ந்துகிடக்கும் சாணங்களை யொன்றுசேர்த்துப் பொடித்து மேற்கூறியவாறு கோசலத்தால் உருண்டைசெய்து சுட்டெடுத்து வைத்துக்கொள்வது.

உபகற்பமாவது :— கடையில் விற்கின்ற விபூதியை வாங்கி வடிகட்டிக் கோசலத்தாற்பிசைந்து முன்சொன்னபடிச் சுட்டெடுத்து வைத்துக்கொள்வது.

அகற்பமாவது :— மேற்கூறிய மூன்றுவகையானன்றி வேறு வகையினால் சேர்த்துவைக்கப்பட்ட விபூதிகளனைத்தும் அகற்பம் எனப்படும்.

கற்பத்திற்குக் கூறியவாறே அநுகற்பம் உபகற்ப மிரண்டிற்கும் அவ்வவ் வினைக்குரிய மந்திரங்களை யுச்சரித்துக்கொள்ளல் வேண்டும். மந்திரமில்லாமல் உருட்டல் முதலியன செய்தல் கற்பமாகாது. இந்நால்வகை விபூதிகளில் முதலிற்கூறிய கற்பமே பரமவுத்தமமானது ; அதுவே நூல்களிற் கூறிய பலனைத் தடையின்றி யளிக்கவல்லது. இதில் எட்டுணையும் ஐயமின்றாம். அநுகற்பம் உபகற்பம் என்னு மிரண்டும் முறையே மத்திமம் அதமம் என்னலாகும். நான்காவதாகிய அகற்பமோ அணியத்தகுதியற்றதென்றறிக.

இங்ஙனங் கூறிய நன்முறையால் சிரத்தையுடன் விபூதியைத் தேர்ந்து செய்து அணிந்துகொள்ளாமல் முறையிற் றவறிய இழிந்தவர்கள் விற்கும் நீற்றை வாங்கி மனம்போனவாறு பூசிக்கொண்டு பலனைக் காணோமே யென்று வீண்வாதம்பேசுவது அறிவுடையோர் செயலன்றே? முறைவழுவாமல் அன்புடன் செய்வார்க்குப் பலனுங் கைகூடுதல் திண்ணம். மேலும் மேற்கூறிய முறையைப் பொருளுடையார் முதல் ஏழைகள்வரை யாரும் எளிதில் செய்யலாம். முயற்சியேயன்றிப் பொருட்செலவு சிறிதுமில்லையே. பொருட்செலவு நேர்ந்தாலன்றோ அஃதில்லார் தம்மால் முடியாதென வியம்பலாம். இது எவர்க்கும் எளிதில் முடியக்கூடியதே. இதனைக் கையாளாது குறைகூறுவது பாவத்திற்கிடமேயன்றி வேறன்று. பொதுவாகச் சைவ சமயத்திற்கே இன்றியமையாத திருநீற்றைச் சேர்த்துவைப்பதில் முதற்கண் இடையூறாக நிற்கும் சோம்பலை நீறுக்கினால் பின்னர் மூவகைக் கற்பத்தில் இயன்றதொன்றைச் செய்துகொள்வது சுலபமாகும். ஆதலால் சிவதீக்ஷை செய்துகொள்ளாதவர் எவராயினும்

னவத்திருக்கும் விபூதியைச் சிவதீக்ஷைசெய்துகொண்டவர் எக்கார ணத்தை முன்னிட்டும் வாங்கித் தரித்தல் கூடாது. இங்ஙனமாயின் வீரசைவர்கள் பிறர்பால் வாங்கித் தம் இஷ்டலிங்கப் பெருமானுக்கு எப்படித் தரித்தல் பொருந்தும்? இதுபற்றியே நமது முன்னோர் குருமுகமாகப் பெற்ற ஆதாரமெனச் சிறப்பித்துக் கூறும் விபூதித் திரளையே பூஜாகாலங்களில் உபயோகித்து வருகின்றார்கள். நமது சங்கத்தினாலும் பத்திரிகையாலும் விபூதி தரிக்கும் நமது முன்னோர் களின்முறையை நன்குணர்ந்து கைநழுவவிடாது மேற்கொள்வரென நம்புகின்றேன். இப்படி விதிப்படிச் சேர்த்த விபூதியைத் தூய்மை யான பாத்திரத்தில் நன்மணங்கமழ வைத்திருத்தல்வேண்டும். தூப முதலியவற்றால் பூசித்தலும் வேண்டும்.

இத்தகைய திருநீற்றை முறைப்படி யணிவதனால் கங்கை முதலிய தீர்த்தத்தில் முழுகிய பலனிலும் சிறந்தபலனைத் தரும் என் பதில் ஐயமின்று. நீரால் புறமாசு நீங்கும்; இத் திருநீறன் புறமா சும் உள்மாசும் நீங்கும் என்பது உண்மையே.

சிறந்த விபூதியினால் சரீரத்தைமூழ்குவிப்பது (உத்தூளனஞ் செய்வது) ஆக்நேய ஸ்நானம் எனப்படும். நீரில் மூழ்குதலோ வரு ணஸ்நானமெனப்படும். இந்திரியங்களை வென்ற முனிவர்களோ ஆக்நேய ஸ்நானஞ் செய்யப் பெரும்பாலும் விரும்புவர். வருணஸ்நா னத்தால் நீரிலுள்ள உயிர்வதை யேற்படினும் ஏற்படலாம். ஆதலால் ஆக்நேயஸ்நானமே சிறந்ததென்பது அவர் கருத்தேயன்றி வருண ஸ்நானத்தை நீக்கியதன்று. இதனால் நீராடும்பொழுதும் உயிர்வதை யின்றி அமைதியோடு நீராடல் வேண்டுமென ஞாபகப்படுத்திய தென்னலாம். இந்திரியம் தன்வயப்படுங்காலத்தில் வருணஸ்நானம் தானே நீங்குமென்பதாயிற்று.

முறைப்படி யிட்டிய விபூதியை உரியகாலத்தில் ஏழு முறை பஞ்சாக்கர மந்திரம் சபித்து உடல் முழுதும் உத்தூளனஞ்செய்து பிறகு திரிபுண்டரதாரணஞ் செய்யவேண்டும். (மூன்று விரலால் அணிவது திரிபுண்டரம்) ஒருசமயம் உத்தூளனத்தை விலக்கினு லும் திரிபுண்டரம் அவசியம் தரித்தல் வேண்டுமெனக் கூறுவர் நமது பெரியார். இதனால் உத்தூளனத்தை விலக்கியதன்று; உத்தூளன மொன்றே போதுமானது திரிபுண்டரம் தரிக்கவேண்டுமென்பது

அவசியமன்று எனக் கூறுவார் கூற்றை மறுத்தற்காகவே இங்ஙனங் கூறியதென்னலாம். மேற்கூறியபடி உத்தூளனந் தரித்தபின்னர் விபூதியை யெடுத்து எட்டுமுறை மூலமந்திரத்தால் அபிமந்திரித்து நீராற் குழைத்து முறைப்படி அணிதல்வேண்டும். அணியுங்கால், தலை, நெற்றி, இருகாது, கழுத்து, மார்பு, கொப்பூழ், இருதோள்கள், இருகைகள், இரண்டு மணிக்கட்டுகள், பிடர், முதுகு ஆகிய பதினைந்து இடங்களிலுந் தரித்தல் வேண்டும்.

சென்னியொளிர் நுதல்செவிகள் களம்புயங்களகலிதயஞ் சிறந்தவுந்தி
மன்னுபிட ரிருவாகு வொடுகெகுத்தே சங்கவின்கூர் மணிபந் தங்க
ளென்னவரு மூவைந்து தானத்தும் புனல்கலந்த வினிய நீற்றால்
உன்னவரும் புகழ்த்திரிபுண் டரமிடுவர் மூலமநு வுரைத்து நல்லோர்

என்பது சித்தாந்த சிகாமணி விபூதிதாரணத்தலச்செய்யுள். ஈசான மந்திரத்தாற் சிரத்திலும், தற்புருடமந்திரத்தால் முகத்திலும், அகோர மந்திரத்தால் மார்பிலும், வாமதேவ மந்திரத்தால் குய்யத்திலும், சத்தியோசர்தத்தாற் பாதத்திலும் பிரணவத்தால் மற்றைய இடங்களிலும் அணிதல்வேண்டும்.

வலக்கரத்தின் நடுவிரல்கள்மூன்றால் நெற்றியில் ஆறுவிரலளவாயினும், கடைக்கண் அளவாயினும், முன்மயிரினளவாயினும் திரிபுண்டரந்தரித்தல்வேண்டும். இங்கு விரல் என்பது அங்குலமாம். யாவராயினும், காலை மாலை உச்சி ஆகிய முப்பொழுதில் ஒருபொழுதாயினும் திருநீற்றை முறைப்படித் தரித்தல்வேண்டும்; தரித்தால் எவ்வகைப் பாபமு நீங்கப் பரிசுத்தவராவரென்றும், அவரே உருத்ரரென்றும் இதில் ஐயமில்லையென்றும் சித்தாந்த சிகாமணி கூறு நிற்கும். இதுவரை விபூதியைப்பற்றிக் குருமுகமாக அறிவனவற்றை விடுத்து எழுதவேண்டுவன என்னால் இங்கு எடுத்துக் கூறலாயின. இனி அடுத்த மலரில் உருத்திராக்கத்தைப்பற்றி எழுதலாகும்.

(தொடரும்)

தென்னாட்டு வீரசைவர்களின் கடமை.

உண்மைச் சமயாபிமானிகளே !

மைசூர் ஐதராபாத் தேசங்களிலும், பம்பாய் மாகாணத்திலும் உள்ள வீரசைவர்களில் அநேகர் கல்வி வியாபாரம் விவசாயம் முதலிய தொழில்களில் முன்னேற்றமடைந்தும், கவர்ன்மெண்டு உத்தியோகங்களிலும் லோகல்போர்டுகளிலும் அநேகர் உழைத்துத் தந்திறமையைக் காட்டிப் பிரசித்திபெற்றும் வேண்டிய செல்வாக்குடன் இருக்கிறார்கள். அந்நாடுகளில் எந்தத்துறையிலும் வீரசைவர்கள் இல்லையென்று சொல்லுதற்கு இடமின்றிப்பலதுறையிலும் பலர் இருக்கின்றார்கள். ஆனால் இத்தமிழ்நாட்டில் அப்படி மேலான நிலையில் இருந்ததில்லையோவென்றால் முற்காலத்தில் வேலூர் ஆற்காடு தஞ்சை முதலிய இடங்களிலிருந்த தமிழ்நாட்டு மன்னர்கட்கு வீரசைவர்களே ஆப்த மந்திரிகளாக இருந்திருக்கிறார்கள். ஆனால் அப்பதவிகளை விரும்பிய நம்நாட்டு வஞ்சகச் சூழ்ச்சியாளரின் செயலால் அவையெல்லாம் பழங்கதையாயின ; அந்தோ ! அதுநிற்க.

மிகப்பழமையானகாலமுதல் வீரசைவர்கட்கு முக்கிய நிலயமாயிருந்த இத்தென்னாடானது, ஒருவர்க் கொருவர் போக்கு வாத்தில்லாமையாலும், வைதீகமார்க்கத்தையே பற்றிநின்று வியாபாரம் முதலிய லௌகிக மார்க்கத்தை அறவே கைவிட்டமையாலும் தென்னாட்டில் வீரசைவர்களே இல்லையோ என்று அபிப்பிராயப்படும்படி அந்நாட்டு வீரசைவர்கட்கே அந்நியநாடாயிற்று. இதுவுமன்றித் தென்னாட்டிலுள்ள வீரசைவர்கள் அநேக வுட்பிரிவுகளாய்ப் பிரிந்து ஒருவருடன் ஒருவர் கலப்பதற்கிடமில்லாமலும் இரண்டொரு புலவர் பெருமக்களைத்தவிர, பெரும்பாலோர் கன்னடம் சமஸ்கிருதம் முதலிய நூற்பயிற்சியில்லாமையால் மதக்கொள்கைகளையறியாமலும் வீரசைவ மதத்தின் தருமத்தையும் பரந்த நோக்கத்தையும் மறந்து வரும் நிலைமையில்வந்துவிட்டார்கள். ஆனால் இனிச் செய்யவேண்டிய தென்னவென்றால், இத்தென்னாட்டில் எந்தெந்த இடங்களில் எவ்வளவு வீரசைவர்களிருக்கின்றார்கள் ? எந்தெந்த இடங்களில் வீரசைவ மடங்களிருக்கின்றன ? அவைகள் என்ன நிலையிலுள்ளன ? என்று அறிதற்கிடமில்லாமலேயிருக்கின்றது. ஆதலால், மதாபிமானிகள் யாவரும் தயைசெய்து எந்தெந்த இடங்களில் சுமார் எவ்வளவு

வீரசைவர்களிருக்கின்றார்கள்? அவர்கள் தொழில்களென்ன? அவர்கள் வழக்க வொழுக்கங்கள் எந்தநிலைமையிலிருக்கின்றன? வீரசைவ மடங்களும் அவற்றைச் சார்ந்த தேவாலயங்களும் அவற்றிற்குச் சம்பந்தமான நிலங்களும் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? என்பனமுதலியவற்றை மாதந்தோறும் எழுதிப் பத்திராதிபர்க்கு அனுப்பிவருவார்களாயின் அவர் இப் பத்திரிகையில் அவற்றை யாவருக்கும் விளங்கும்படி வெளியிட்டு வருவார். இதுவே இக்காலவியல்புக்கேற்ப முதற்கண்செய்ய வேண்டிய கடமையாகும். இக்கடமையை யாவரும் மேற்கொள்ளவேண்டுமென வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

ஓர் வீரசைவன்.

தென்னாட்டு நிகழ்ச்சிகள்.

சிதம்பரம் வீரசைவ சித்தாந்த சிவப்பிரகாசக் கழகம்.

29—12—28-ல் சிதம்பரம் ஸ்ரீமத் ஆறுமுக நாவலரவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையின்கண் தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகாசங்கத்தின் கிளைச்சங்கமாகிய ஷைக்கழகம் கூடப்பெற்றது. ஆருத்திரா தரிசனத்திற்காக வந்திருந்த அபலூர் உள்ளூர் வாசிகளாகிய பல வீரசைவர்கள் வந்திருந்தார்கள். திருவாளர், ஆ. பொன்னுசாமி ஐயர் அவர்கள் தலைமைவகித்தார்கள். வீரசைவம் பத்திராசிரியர் வீ. குமாரவீரய்யரவர்கள் வீரசைவ சமய முன்னேற்றத்திற்குரிய சில அரிய கருத்துக்களை யெடுத்து விளக்கினார்கள். இனி வருடந்தோறும் மார்கழித் திருவாதிரைத் திருவிழாக் காலங்களில் குறிப்பிட்டதினத்தில் பெருநோக்கத்துடன் தக்கதோரிடத்தில் இக்கழகத்தை நடத்திவரவேண்டுமென்றும், தாரணஞ்செய்துகொண்டுள்ள மாகேசர் பக்தர் அனைவரும் ஒருங்கே கூடி வீரசைவ சமயமுன்னேற்றத்திற்குரிய முயற்சிகளைச் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றது. "வீரசைவம்" என்னும் பத்திரிகையை அன்புடன் ஆதரிப்பதாக வாக்களித்து சுமார் 50 பேர் சந்தாதாரராகக் கையொப்பமிட்டார்கள், வாழ்த்துரைகூறச் சங்கம் இனிது நிறைவேறிற்று.

இதைப்போல் இனி வீரசைவர்களனைவரும் தம் சமயமுன்னேற்றத்திற்காகத் திருவண்ணாமலை, திருவாரூர், விருத்தாசலம், கும்பகோணம் முதலிய பல தலங்களிலும் விசேஷத் திருவிழாக் காலங்களிலெல்லாம் கிளைச்சங்கங்கூட்டி வீரசைவ சமயப்பிரசாரம் செய்ய முயற்சித்தல் வேண்டும். திருவிழாக்காலங்களில் யாவரும் தாமாகவே வருவார்களாதலின் சுருங்கிய செலவில் நடத்திப் பெரும்பயனெய்தலாமென்பதையறிந்து சமயாபிமானிகள் முயல்வார்களாக. முதல் மததாத்திலேயே இப்பத்திரிகை வாயிலாகவும் விளம்பரஞ்செய்வது உத்தமம்.

காரியதரிசி.

லால்குடி தாலுகாபோர்டு.

சென்ற மாதத்தில் நடந்த தேர்தலில் பார்ப்பனரல்லாதாரும் பார்ப்பனருமாகப் பலர் உறுப்பினர் தானத்தை விரும்பிநின்றனர். பார்ப்பனரல்லாதாரே உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கலாயினர். உறுப்பினருள்ளும் கடந்த இருமுறைகளில் முன்வந்துழைத்துப் பல நன்மைகளைச் செய்தவர்களும், உயர்குடிப் பிறப்பினர்களும், சைவசமய சீலர்களும், கொடையாளர்களும் ஆகிய பெருவளநல்லூர் திருவாளர், பா. கிருஷ்ணசாமி செட்டியாரவர்கள் தலைவராகவும், லால்குடி திருவாளர் L. N. பரமசிவம்பிள்ளையவர்கள் உபத்தலைவராகவும், திருமங்கலம் திருவாளர், மீனாக்ஷிசுந்தர முதலியார் B. A. அவர்கள் ஜில்லாபோர்டு உறுப்பினராகவும் (லால்குடி யூனியன்போர்டு தலைவராகவும்) தேர்ந்தெடுக்கப்பெற்று முன்வந்திருப்பதையறிய இத்தமிழ்நாடு இவர்களால் கல்வித்துறையில் பல நன்மைகளும், சமய மேன்பாடுகளும் உண்டாதல் கூடுமென எதிர்பார்த்தநோக்கத்துடன் பெருமகிழ்வடைகின்றது. இவர்கள், பிளவினையுண்டாக்க முயலும் சூழ்ச்சியாளரின் வஞ்சகச் செயலுக்கிடங்கொடாது விழிப்புடனிற்கும் போற்றலுக்கு இன்னும் இத்தமிழுலகம்பெருவியப்பும் மகிழ்வுமடைகின்றது. இத் தாலுகாபோர்டு பாடசாலைகளில் பெரும்பான்மையோர் வீரசைவர்களே உபாத்தியாயராக இவர்களால் ஆதரிக்கப்பெற்றுவருவதைக்காண வீரசைவ சமூகம் இவர்கள்பால் நன்றியறிதலுடன் அன்புபாராட்டக் கடமையுற்றிருக்கின்றது.

உண்மையுரைப்போன்.

தைப்பூசவுற்சவம்.

தாத்தையங்கார்பேட்டையையடுத்த ஸ்ரீ சண்முககிரி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தண்டயுதபாணி சுவாமிக்குத் தைப்பூசத்தன்று வேதாகம விதிப்படி அபிஷேக ஆராதனையும், மாகேஸ்வர பூசையும், இரவு வள்ளி தேவநாயகியார் சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் திருவுலாக்காட்சியும் சிறப்பாக நடைபெற்றன. இதன் மானேஜர் திருவாளர் குழந்தைசாமிஐயர் அவர்களுடைய பெருமுயற்சி பாராட்டத்தக்கதாகின்றது. இவ்வாலயம் விதியறிந்த வீரசைவராலேயே பூசிக்கப்பெறுகின்றது. கண்டு தரிசிக்குங் காட்சிக்குரியது. சமீபத்தில் மகாமண்டபங் கட்டத்தொடங்குவதாகவுந் தெரியவருகின்றது.

பாராட்டல்.

இப்பத்திரிகையின் ஆயுட் சந்தாதாராகக் கையொப்பமிட்டவர்களில்ஒருவரும், மேலவட்டகைக் காரியதரிசியுமாகிய காருகுடி திருவாளர், S. முத்துசாமிஐயரவர்கள் இப்பத்திரிகையின் மூலதனத்திற்காக ஆயுட்சந்தா ரூ. 25 0-0 அனுப்பிவைத்துள்ளார்கள். இத்துடன் அவ்வட்டகையிலுள்ள உறுப்பினர்களிடம் தாமாகவேசென்று சந்தாதாராகச்சேரக் கையொப்பம்வாங்கியும், வசூல்செய்தும் அனுப்பிவைத்துள்ளார்கள். மகாசங்கத்தின் பொறுப்பாளராயிருந்த வளையடுப்பு திருவாளர் பொன்னுசாமி ஐயர் அவர்கள் ஆயுட்சந்தாதாராகச் சேர்ந்து ரூ. 25—0—0 அனுப்பிவைப்பதாகக் கையொப்பமிட்டு அனுப்பியுள்ளார்கள். இவ்விருவர்களுடைய உபகாரச்செயல்களுக்காக இதன்நிறைவேற்றற் கழகத்தார்கள் பெருமகிழ்வுடன் நன்றிபாராட்டுகின்றார்கள்.

வீரசைவ மாணவரின் அகால மரணம்.

லால்குடி போர்டு ஐஸ்கூலில் VI. பாரத்தில் வாசித்து இவ்வருடம் S. S. L. C. பரீக்ஷைக்குச் செல்லத் தகுதியாயிருந்தவரும், வீரசைவ இளைஞர்கூட்டத்தின் உறுப்பினரும், குமுளூர்-திரு.சபாபதி ஐயர் அவர்கள் மூத்த குமாரருமான சுமார் 18 வயதுள்ள S. சிவசுப்பிரமணியன் என்னும் மாணவர் தை-மீ 15உ திடீரெனச் சிவலிங்கைக்கியமானாரென வந்த கடிதம் ஆற்றொணாத் துயரத்தை விளைவித்தது. இவர் நற்குண நற்செய்கை நல்லறிவால் வீரசைவ மாணவர்க்கே வழிகாட்டியாகலாமெனக் கொண்டிருந்த எண்ணத்திற்கு முற்றிலும் மாறாயிற்றன்றோ! அந்தோ! இவரது ஆத்மா சாந்தியடையவும், தந்தையார் ஆறுதல் பெறவும் இறைவனருள்புரிக.

வீரசைவம் என்னும் நமது பத்திரிகையைப்பற்றிய மதிப்புரை.

திருவாளர், பண்டிதர் ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள்
பிஷப் ஹீபர் கல்லூரித் தலைமைத் தமிழ்விரிவுரையாளர்,
திரிசிரபுரம்.

அன்பு நிறைந்த நண்பரீர் !

நலம் ; நலம் அறியும் விருப்பமுடையேன். தாங்கள் அன்புடன் அனுப்பிய "வீரசைவம்" மலர் க-ல் இதழ் க. வரப்பெற்றுப் பெருமகிழ் வெய்தினேன். இருபது நாட்களாக நோயால் மெலிந்து யாதும் படிக்குஞ் செயலின்றியிருந்த யான் நெருநல் தங்கள் பத்திரிகை பெற்றவுடன் அதில் ஓர் எழுத்தும் விடாது படித்தேன். யாவும் இன்றியமையாது படித்தறிய வேண்டியனவாக இருந்தன. தங்களை ஆசிரியராகக்கொண்டு தக்கார் பலரால் எழுதப்பெறும் தகுதிவாய்ந்த இப்பத்திரிகை வீரசைவசமூகத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருநலம் விளைக்கு மென்னுந் துணிபுடையேன். ஆற்றலும் பொழுதும் வாய்க்குங்கால் யானும் இயன்றது ஆற்றும் கடப்பாடுடையேன்.

அன்பன்,

மு. வேங்கடசாமி.

வாழ்த்துரை வெண்பா

குன்ற மெறிந்த குகன்செயலோ குற்றமிலார்
மன்ற நிறைந்த மதிச்செயலோ ? — என்றும்
முன்னாட் பிறையின் முகிழ்வீர சைவமலர்
நன்னாளா நின்றிலக நன்கு.

உவந்துலவு ஞான வொளியே ! யொருமா
தவந்துணையா நின்ற தனியே ! —பவந்தொலைய
வீரசைவ மென்று விளங்குமதித் தாளே ! நீ
தீரமுட னின்றுலவத் தேர்ந்து.

பேரன் புடையீர் ! பெருமை மிகவுடையீர் !
வீரசைவ மாமலரை வேண்டுவீர்—வாரமுடன்
இக்காலத் திற்கேற்ப வேற்றதுணை யாமெங்குந்
தக்கா ருறவளிக்குந் தான்.

அடியன், முத்துசாமி உபாத்தியாயர்,

துறையூர், சிவப்பிரகாச சுவாமிகள் மடம், பசும்பாலூர்.

வடநாட்டு நிகழ்ச்சிகள்.

"பல்லாரி வீரசைவப் பாடசாலை ஆண்டுத் திருவிழா."

16—12—28ல் ஷை பாடசாலையின் வருடத் திருவிழா அப்பாடசாலையின் அழகிய கட்டடத்தில் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது அங்கு விஜயம் செய்திருந்த கனவான்களும் அறிவாளர்களுமாகிய பலரும் பாடசாலை நடந்துவரும் சிறப்பையும் நடத்திவரும் முறையையுங்கேட்டும் பார்த்தும் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள். இது தொகரி திருவாளர், **வீரமல்லப்பா** என்பவருடைய முயற்சியினால் ஸ்தாபிக்கப்பெற்று வீரசைவ மாணாக்கர்கட்கே யல்லாமல் ஏனையமதத்தினர்கட்கும் கல்வித்தானத்தைச்செய்துவருகின்றது. திரு. மல்லப்பாஅவர்களுடைய தகப்பனார் தொகரி வீரப்பா அவர்கள், எல்லாத் தானங்களினும் வித்தியா தானமே மேன்மையானதென் றெண்ணி வீரசைவமாணாக்கர்களுக்காக ஓர் வீரசைவமாணவர் நிலையத்தை (Hostel) சுமார் 30,000 ரூபாய் வரை செலவு செய்து கட்டுவித்து மாணாக்கர்கட்கு உணவு உடை முதலியவற்றிற்குத்தக்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். பல்லாரி ஜில்லாவில் இத்தகைய தருமச் செயல்களால் அநேக வீரசைவ மாணாக்கர்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். இதுவுமன்றிச்சுமார் ஒரு லக்ஷம் ரூபாய் கொண்ட பணநிதி (Fund) ஒன்றிருக்கிறது. இந்த நிதியின் வட்டித்தொகையில் மாணாக்கர்களுக்கு வேண்டிய சகாயம் செய்து வருகின்றார்கள்.

சென்னை மாகாணத்தைச்சேர்ந்த வடக்கிலுள்ள பல்லாரியின்கண் நமதுவீரசைவ சகோதரர்கள் இப்படிப்பட்ட தருமகாரியங்களைச் செய்துமுன்னேற்றமடைந்துவர, தென்னாட்டு வீரசைவர்களும், மேன்மையுற்ற வீரசைவ பீடாதிபதிகளும் தம் சமயமும் சமூகமும் முன்னேற்றமடைதற்குரிய யாதொரு அறச்செயல்களுஞ் செய்யாது தம் நலம்பேணி நீண்டதூக்கத்திலிருப்பதைப்பார்க்க அந்தோ! எவ்வளவு வருத்தத்தைத் தருகின்றது.

வீரசைவ மடாதிபதிகளின் ஆண்டு நிறைவு.

பம்பாய் இலாகா உப்பள்ளி மூவாயிரமடத்து அத்தியக்ஷ ஸ்ரீ சூனிய சிம்மாசனாதீச ஸ்ரீ குருசித்த ராஜயோகேந்திர மகா சுவாமிகளுடைய 3-ம் வருடத் திருவிழா, டிசம்பர் 20, 21. 22,ம் தேதிகளில் மிகவுஞ்சிறப்பாக நலகுந்தம் என்னுமிடத்தில் நிறைவேறிற்று. (இத் தென்னாட்டில் பிராமணர்களில் தில்லைமூவாயிரவர் அஷ்ட சகஸ்திரர் என்றிருப்பது போல வடநாட்டில் வீரசைவர்களிலும் மூவாயிரவர் முதலிய பெருந்தொகுப்பு மரபினர் உண்டென்பர்).

வீரசைவ மடாதிபதிகள் நியமனம்.

பம்பாய் கதக் தாலூகா வசரெள்ளி வீரசைவ மடாலயத்திற்கு மூர்த்திகளில்லாதிருந்த விஷயம் ஸ்ரீமந் மகாராஜ நிரஞ்சன ஜகத்குரு முருகராஜேந்திர மகாசுவாமிகளின் பார்வைக்குவர, ஜகத்குரு சுவாமிகள் அங்கு விஜயஞ்செய்து ஜனவரி 2-ம்தேதி ஷை மடாலயத்திற்குத்தக்க மூர்த்திகளை நியமனஞ் செய்துள்ளார்கள். இதுவன்றோ மடாதிபதிகளின் கடமை!

பெண்கல்வி.

பம்பாயில் யம். பி. பி-யஸ் என்னும் உயர்ந்த டாக்டர் பரீக்ஷையிற்றேறி, இன்னும் உயர்ந்த பரீக்ஷையில் தேற்சிபெற்றுவர ஐரோப்பாவுக்குச் சென்றிருந்த வீரசைவப் பெண்பணியாகிய கிருஷ்ணாபாய் என்பவர் இரண்டொரு மாதங்களில் இந்தியாவிற்கு வருவார் எனத் தெரிகிறது.

பல்லாரி லிங்காயத்தார்களும் ஸ்ரீங்கேரி சங்கராசாரியரும்.

ஸ்ரீங்கேரி மடத்து அதிபராகிய ஸ்ரீ சங்கராசாரியார் 1920 டிசம்பரில் பல்லாரி ஜில்லா ஹோலால் கிராமத்திற்குத் தமது தந்தப் பல்லக்கில் பிரவேசஞ் செய்ய அங்கிருந்த லிங்காயத்தார்கள் தமது மதாசாரியர் அதற்குமுன்னர் தந்தப்பல்லக்கில் வரும்போது அங்குள்ள பிராமணர்கள் லிங்காயத்தாரது குருவிற்குப் பல்லக்கிற் செல்ல மதிப்பில்லையெனத்தடுத்துண்டாக்கிய வருத்தங்காரணமாகப்பல்லக்கை மேற் செல்லவொட்டாதுதடுக்க, சங்கராசாரியார் தடையுற்றுப் பக்கத்திலிருந்த தோட்டத்தில் சிலமாதந் தங்கிச் சென்ற நஷ்டத்திற்காக லிங்காயத்தார் நஷ்ட ஈடாக ரூ. லக்ஷம் கொடுக்கவேண்டுமெனச் சப்

கோர்டில் தாவா செய்யப்பட்டதென்றும், சப்ஜட்ஜ் அவர்கள் 5000 ரூ கொடுக்க வேண்டுமெனத் தீர்ப்புச் செய்ய, லிங்காயத்தார் சென்னை ஐகோர்ட்டில்பிரபல வக்கீலைக் கொண்டு அப்பீல்செய்ய, சனம் ஜட்ஜ் அவர்கள் பிரத்தியேகநஷ்டங்கூறுவது சரியல்லவென்றும், சாதாரண மனிதர்க்குக் கொடுக்கப்படும் நஷ்டஈடுதான்கொடுக்கச் சட்டம் இடங் கொடுக்கிறதென்றும், மடாதிபதியின் மானபங்கத்திற்காக ரூ. 1000 நஷ்டஈடு கொடுக்க வேண்டு மெனவுங் கூறி சப் ஜட்ஜ் விதித்ததைக் குறைத்தார்களென்றும் 16—1—29 சுதேசமித்திரனிலிருந்து தெரிய வருகிறது. இதனால் வடநாட்டில் லிங்காயத்தார்க்கும் பிராமணர்களுக் கும் நீடித்த விரோதம் இருப்பதுபோலும்! உலகமெங்கும் யாரும் ஒரு மைப்படவாழ வேண்டுமெனப் பேசிக்கொண்டிருக்கும் நாகரீகமிக்க இக்காலத்தும் ஒருவர்க்கொருவர் மதாசாரியரின் பல்லக்கைத் தடுத் துக்கொள்வதென்னும் நாகரீகமின்மையானது மிகவும் விசனிக்கத்தக் கதே! நிற்க, லிங்காயத்தார் என்பவர் வீரசைவராயின், வேதாகமங் களிற் காணப்பெறும் வீரசைவர் என்பார் லிங்காயத்தாரென அழைக் கப்பெறுவானேன்? விபூதி பூசிக் கொண்டிருக்கும் அடியார்களைக் கண்டு அருவருப்புற்ற ஒரு சாரார் பூச்சாண்டியெனக் குழந்தைகளைப் பயமுறுத்தும் போதும் இழித்துரைத்துவர அதன் கருத்தையறியாத சைவமக்களும் அவ்வாறேகூறி வருதல்போல, வீரசைவர்களைக்கண்டு அருவருப்புற்ற ஒரு சாரார் லிங்காயத்தாரென்றும், இந்தியசரித்திரத் தில் மைசூர் ராஜ்யத்தில் லிங்கங்கட்டி யென்ற சாதியார் 5 லக்ஷம் பேர் இருக்கிறார்கள்என்றும் இழித்துரைத்துவந்த இழிவை நினையாது வீரசைவர்களும் அவ்வாறழைக்கவும் சொல்லிக் கொள்ளவும் உடன் படலாயினர். அந்தோ இஃதென்ன ஆராய்ச்சியின்மை! பூணு நூல் தரிப்பாரைப் பூணூல்மாட்டி யென்றும், மான்றோல் தரிப்பாரைத் தோல் கட்டியென்றும்கூற உண்மைப்பெயரென்று ஏற்றுக்கொள்வா ரில்லையே? இங்ஙனம் பிறரிழித்துக்கூறும் அடாதமொழிகளைப் பூஷண மாகக் கொள்ளும் வீரசைவரது பொறுமைதானென்னே! வேதாகமங் களினும் புராணேதிகாசங்களினுஞ் சிறப்பித்துக் கூறும் 'வீரசைவர், என்ற பெயரால் அழைக்கப் பெறவும், சொல்லிக் கொள்ளவும் வட நாட்டாரும் தென்னாட்டாருமாகிய வீரசைவரனைவரும் முயற்சிப்பார் களாக!

இங்ஙனம்,

உண்மை கண்டுணர்த்தும் ஓர் மாணவன்.

நாடரிய சத்தியோ சாதத்தும் வாமத்து
நன்ரு மகோரத்தினு
நவையற்ற புருடத்து மாகமமோ ரைவ்வைந்து
நல்கியீ சானத்திலே,
பீடுதரு மெட்டுமுறை தந்தவற் றிடைநீசோல்
பெருமைபெறு மருமைவிதியிற்
பேசரிய பூசைசிவ கோசரியே னப்புரிதல்
பெற்றிலேன் மற்றடியனேன்,
வேடுவர்கு லத்தலைவன் மெய்யன்பு பூண்டிலேன்
வேட்டொருவர் மாட்டருளினுன்
மீக்கொளொரு புடையொப்பு நோக்கிவைத் தனை
வேண்டல்வேண் டாமையிலையா, [சாற்றின்
லாடுநின் பால்வேறு பாடொன்றி லாமையா
லபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் சேறிவுற்ற மர்ந்தவிறை
யபிடே மாடியருளே.

(இ - ள்) நாடு அரிய - தேடுதற்கரிதான,— சத்தியோசாதத்தும் - (மேற்குநோக்கிய வெண்மைநிறமான) சத்தியோசாதம் என்னும் முகத்தானும்,— வாமத்தும் - (வடக்குநோக்கிய செம்மைநிறமான) வாமதேவம் என்னும் முகத்தானும்,— நன்று ஆம் - நன்மையைத் தருவதாகிய,— அகோரத்தினும் (தெற்குநோக்கிய கருமைநிறமான) அகோரம் என்னும் முகத்தானும்,—நவை அற்ற-குற்றமற்ற,— புருடத்தும் - (கிழக்கு நோக்கிய பொன்மை நிறமான) தற்புருடம் என்னும் முகத்தானும்,— ஆகமம் - ஆகமங்களை,—ஐவைந்து - ஐந்து ஐந்தாக,— நல்கி - உண்டாக்கி,— ஈசானத்தில் -(மேல்நோக்கிய சுத்த பளிங்கின் நிறமான) ஈசானம் என்னும்முகத்தால்,—எட்டு - எட்டாகமங்களையும்,— முறைதந்து - முறையே (வரிசையாக) உண்டாக்கி,— அவற்றிடை - அவ்வாகமங்கள்தோறும்,— நீ சொல் - நீர் சொல்லியருளிய,— பெருமைபெறும் - மேன்மைபெற்ற,— அருமைவிதியின் - செய்தற் கருமையான பூசாவிதிப்படி,— பேசரிய - சொல்லுதற்கருமையான,—பூசை - (சோடசவுபசாரத்துடன் செய்யும்) பூசையினை,- சிவகோசரி என - (திருக்காளத்தியில்) சிவகோசரியார் என்னும் பெரியார் செய்ததுபோல,—புரிதல் பெற்றிலேன் - (விதிமார்க்கந்தவருது) செய்யப் பெற்றிலேன்,— மற்று - அதுவன்றி,—அடியனேன் - உமது

அடியவன் எனப்பெறும் யான்,— வேடுவர்குலத்தலைவன் - வேடர் குலத்திற்குத் தலைவரான திண்ணனாரைப்போல,—மெய்யன்பு பூண்டி லேன் - உண்மையன்பைப்பூண்டு (பக்திமார்க்கப்பூசையையும்) செய் யப்பெற்றிலேன்,— ஒருவர்மாட்டு - அவ்விருவருள் திண்ணனாராகிய ஒருவரிடத்தில்,— அருளினால் - பெருங்கருணைத் திறத்தால்,— மீக் கொள் ஒருபுடையொப்பு - மேலாகக் கொள்ளத்தக்க ஒருபுடை யொப்புமையை,—நோக்கி - பார்த்து,—வேட்டு - (அத்திண்ணனாரது பூசையையும்) விரும்பி,— வைத்தனை - (விதிமார்க்கம் விலக்குமார்க் கம் என்னும் இருவகைப் பூசையையும் இயற்றிய அவ்விருவரையும் ஒப்பாகக்கருதி உயர்ந்த பதவியில்) வைத்தருளினீர்,— சாற்றின் - (அங்ஙனம் வைத்தற்குக்காரணம் இன்னதெனச்) சொல்லுமிடத்து,— வேண்டல் வேண்டாமை இலை - நீர் விதியின்கண் இச்சையும் விலக் கின்கண் வெறுப்பும் இல்லாதவராகஇருக்கின்றீர்,—ஆடும் நின்பால்- அபிடேகிக்கும்படி உடன்பட்டிருக்கும் உம்மிடத்தில்,— வேறுபாடு ஒன்று இலாமையால்,— விருப்பு வெறுப்பு என்னும் வேறுபாடாகிய குணம் ஒன்று இல்லாமையால்,— அபிடேகம் ஆடியருள் - (விதிமா ர்க்கம் பக்திமார்க்கம் என்னும் இருவகை நெறியையும் பற்றாது அடி யேன் செய்யும்) அபிடேகத்தையும் ஏற்றுக்கொண்டருளும் என்ற படி. “ அறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை அபிடேக மாடியருளே ” என்பதற்கு முதற்பாட்டிற்கூறியவாறு உரைத்துக் கொள்க.

நல்கி, தந்து என்னும் எச்சவினைகள் சொல் என்னுங் காலங் கரந்த பெயரெச்ச வினையையும், நோக்கி, வேட்டுஎன்னும் எச்சவினை கள் வைத்தனை என்னும் முற்றுவினையையும் கொண்டு முடிகின்றன. வைத்தனை, இலை என்பன முறையே ‘ ஐ ’ விகுதிபெற்ற முன்னிலை யிறந்தகாலவினைமுற்றும், குறிப்புமுற்றுமாம்.

ஒருபுடை யொப்புமையாவது,— இரண்டுபொருட்கண்ணும் பொதுத்தன்மை முழுதும் ஒத்தமையாது சிறுபான்மை ஒத்தமைந் திருத்தல். ஈண்டு ஒருபுடை யொப்புமையாவது,— அருமை விதி யிற் பூசைபுரிதல் என்னும் விதிவகையான் ஒவ்வாது ‘முயற்சி’ என்ற ஒருவகையான் ஒத்திருத்தல்.

ஆசிரியர், இஷ்டலிங்கப்பெருமானை முன்னிலையாக்கிக் “ கர தலத் தமர்ந்த கருணைக்கடலே! அடியேன் ஆகமத்தில் விதித்தவாறு சிவகோசரியாரைப்போல விதிமுறைதவறாது பூசிக்கப்பெற்றிலேன், அல்லது திண்ணனாரைப்போல் மெய்யன்பையும் அடையப்பெற்றி

லேன், ஆனால் அவ்விருவருள் திண்ணனாரிடத்து உமது பெருங்கருணைத் திறந்தால் விதிவிலக்கென்னும் இரண்டையும் நோக்காது முயற்சிவகையான் ஒருபுடை யொப்புமையை நோக்கி அவர்பால் விருப்பம்வைத்து இருவருக்கும் ஒப்ப முத்தியளித்தருளீராதலான், நீர் வேண்டல் வேண்டாமையை யில்லாதவராகக் காண்கின்றீர்; எவர் எது செய்யினும் உம்மிடத்து விருப்பு வெறுப்பென்னும்வேறுபாடில்லாமையால் ஒருவகை நிலையையும் பற்றாது செய்யும் எனது பூசையையும் ஏற்றுக்கொண்டருளும்" எனத் தம் பூசையை மறாது ஏற்றுக்கொள்ளுமாறு காரணங்காட்டி வினயந்தோன்ற வேண்டிக் கொண்டாராயிற்று. இந்நயம் நான்காவது செய்யுட்கண்ணும் அமைந்திருத்தல்காண்க.

க. சத்தியோசாதத்திற் றோன்றிய ஆகமங்கள் ஐந்தாவன:—
காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம் என்பன.

உ. வாமதேவத்திற் றோன்றிய ஆகமங்கள் ஐந்தாவன :—
தீபதம், சூட்சுமம், சகத்திரம், அம்சுமான், சுப்பிரதீயம் என்பன.

ங. அகோர முகத்திற் றோன்றிய ஆகமங்கள் ஐந்தாவன :—
விஜயம், நிசுவாசம், சுவாயம்பு, அநலம், வீராகமம் என்பன.

ச. தற்புருட முகத்திற்றோன்றிய ஆகமங்கள் ஐந்தாவன :—
ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞ்ஞானம், விம்பம் என்பன.

ரு. ஈசான முகத்திற்றோன்றிய ஆகமங்கள் எட்டாவன :—
புரோற்கிதம், லிசிதம், சித்தம், சாந்தம், சர்வோத்தமம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என்பன.

ஆகமங்கள் இவ்விருபத்தெட்டேயன்றி உப ஆகமங்களாகவும் பலவுள்ளன. அவற்றின் விரிவையும் வரலாற்றையும் காமிக ஆகமத்தின் முதற்படலத்திற் காண்க.

இவ்வாகமங்களனைத்தும் சிவபெருமானால் உமாதேவிக்கும், உமாதேவியாரால் நந்திதேவர்க்கும், நந்திதேவரால் பிரமற்கும், பிரமனால் இருடிகட்கும், இருடிகளால் மனிதர்க்கும் முறையே கூறப்பெற்றுவந்தனவென இவற்றின் வாலாற்றுமுறையையறிக.

இனிப் பூர்வ சைவாது பூசாவிதிகளில், தற்புருடமுகம் இஷ்டகாமியங்களைக்கொடுத்தலானும், கிழக்குநோக்கிய இந்திர திசையில்

துவாரமாகிய சந்நிதானம் அமைத்துத் தாவரலிங்க பூசையும், ஆன்மார்த்த பூசையும் தற்புருட முகத்திலே செய்யின் ஏனைய முகங்கட்குத் திருப்தியாதலானும் தற்புருட முகத்திலேயே சோடசோபசார பூசையைச் செய்யவேண்டுமென்றும், பூசிப்பவர் இலிங்கத்தின் தென்பால் வடக்கு நோக்கியிருந்து பூசித்தல் வேண்டுமென்றும், எதிர்முகமாக இருத்தற்கு இவர்க்குச் சக்தியில்லையாதலின் இறைவர்க்கு எதிர்நின்று பூசைசெய்யின் கெடுவர்என்றும், வடபால் பார்வதியிருக்கும் அந்தரங்கத் தானமாதலின் இலிங்கத்தின் வடக்கிலிருந்து பூசிக்கலாகாதென்றும், மேற்குத்திசை பின்பக்கமாதலின் பின்னேயிருந்து பூசிப்பது வழுவென்றும் காரணங்காட்டி, மகாகைலாச முதலியபதலங்களிலே இறைவர் பஞ்சகிர்த்தியமும் இந்திரதிசையை நோக்கித் தற்புருடத்திலே நின்று புரிவரென மேற்கோள்கூறித் தென்புறத்திலிருந்து அருச்சிக்கும்படி மந்திரங்களையும் ஈசானுதியாகக் கூறியிருப்ப, இவ்வாசிரியர் சத்தியோசாதத்தை முன்னரெடுத்துக்கூறிப் பின்னர் வாமதேவம் அகோரம் தற்புருடம் ஈசானமென்று லயமார்க்கமாக வுரைத்த தென்னையெனின் நன்றுகூறினாய்!—வீரசைவர்க்குமோக்ஷ காரண பூசையுரியதாதலின் ஆகமங்கள்தோறும் உத்தரபாகத்தில் வீரசாமானியம் வீரவிசேடம் வீரநிராபாரம் என மூன்றுவிதமாக விளங்க விரித்துரைக்கப்பெற்றிருக்கின்றது. பூர்வசைவர்க்கோ அசத்திய நிர்வாணதீக்ஷை சத்திய நிர்வாண தீக்ஷை என்னு மிரண்டால் முத்தியுண்டென்றும் அதுவும் அவர்க்கு மூன்றுஜனனத்தில் கைகூடு மென்றும் பூருவபக்கம்பண்ணி, வீரசைவர்க்கு ஏகஜன்மத்தில் முத்தியடையும்படி இருபத்தொருவிதமான சின்மயதீக்ஷையைக்கூறி, அதன்வழியே ஞானக்கிரியானுசந்தானமாக ஆசாரியரால் அங்கலிங்கசையோகம் பண்ணப்பெற்றுத் தாம் சிவலிங்கத்துக் கெதிர்முகமாகவிருந்து லயமார்க்கமான மோக்ஷப்பிரதானமாக விளங்கும் சத்தியோசாதத்தில் பூசிக்கும்படி விதித்து, பூசிக்கும்பொழு ம் கிழக்கு முகமாகவிருந்து பேதசைவம்போல் தம்மைவிட்டு நீங்குதலில்லாத மகாலிங்கத்தை இடதுகாதலத்தில் அங்குட்டபாரிசம் மேகா முகமிருக்கும்படி எழுந்தருளப்பண்ணிக் காமியங்களை இச்சி..து நிரதிசய சிவசாயுச்சியத்தில் இச்சைவைத்து முத்தியளிக்கும்படி வேண்டி அபிமுக (எதிர்முக) மான சத்தியோசாத முகத்திலேயே சகல சோடசோபசாரமுஞ் செய்து பூசிக்கக்கடவரென்றுணர்த்தி, இதனலிவர்க்கு யாதொரு குற்றமும் வாராதென்றும் உண்மைமுத்தியுண்டென்றும் விளங்கக்கூறும் வாதுளாகம விதிப்படி இவ்வாசிரியரும் சத்தியோசாதம் முதலாகக்கூறினரென்றுணர்க.

வீரசைவம்.

புரவலர் :—

பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அவர்கள்.

நிறைவேற்றற் கழகத்தார் :—

க. திருவாளர். ஆ. பொன்னுசாமி ஐயரவர்கள், சிதம்பரம்.

உ. ,, C. வைத்திலிங்க ஐயரவர்கள், பெருவளநல்லூர்.

ந. ,, சிவப்பிரகார ஐயரவர்கள், அரும்பாவூர்.

ச. ,, S. வேலாயுத ஐயரவர்கள், சோரத்தூர்.

ரு. ,, V. குமாரவீரய்யர் அவர்கள், முசிரி.

பத்திராசிரியர் :— வீ. குமாரவீரய்யர்.

கட்டுரையெழுதிக் காப்பதாக வாக்களித்துள்ள ஆசிரியர்கள்,

திருவாளர் G. C. வீரப்பா B. A., L. L. B., அவர்கள்
வழக்கறிஞர், பெங்களூர்.

,, உருத்திரசாமி ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
ஸ்ரீமத் ஞானியார்பாடசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

,, பண்டிதர், ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள்,
பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்,
திரிசிபுரம்.

,, பண்டிதர், அ. கந்தசாமிபிள்ளையவர்கள்,,
கவர்ன்மெண்டு காலேஜ் தமிழ் விரிவுரையாளர்,
கும்பகோணம்.

,, ஏகாம்பர ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
பச்சையப்பர் உயர்தர கலாசாலை, காஞ்சிபுரம்,

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா முன்பணம் :—	...	25—0—0
ஆண்டுச் சந்தா :—	...	2—0—0
மாணவர்கட்கும், உறுப்பினர்கட்கும் :—		1—8—0
தனியிதழ் :—	....	0—4—0

விளம்பரம்.

வாலாஜா நகரிலுள்ள வீரசைவராகிய மகா-ா-ா-ஸ்ரீ K. S. மல்லப்ப செட்டியார் அவர்கள் தக்க குடும்பத்திலுள்ளவர்கள். சமயாபிமானத்திற் சிறந்த நோக்கமுடையவர்கள். இவர்கள் நீண்ட காலமாக மதிப்புடனும் நாணயமாகவும் வியாபாரஞ்செய்துவருகின்றார்கள். இவர்கள் தங்கத்தாலும், வெள்ளியாலும் சிவலிங்கப் பெருமானை எழுந்தருளச்செய்து தரித்துக்கொள்ளுதற்குரிய அழகிய வடிவில் வேண்டியமாதிரி வேண்டிய இடையில் செச்சை (பெட்டகம்) செய்தனுப்பிவருகிறார்கள். வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம் :—

K. S. மல்லப்ப செட்டியார்,

வெள்ளி செச்சை பிரம்புப்பெட்டி

வியாபாரம்,

சூகணசெட்டி வீதி,

வாலாஜாநகர்.